
கார்த்திகை - மார்கழி 2023

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் -06 எழுத்து -34




தடைகளைத் தகர்த்து
தகவுகளைத் தேடி

**இருமாத கவிதை இதழ்**

**NEENKALUM EZHUTHALAM**
**(Poetry Magazine)**

விலை 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம் – 34

கார்த்திகை -மார்கழி 2023

## ஆசிரியர்

## எஸ். ஆர். தனபாலசிங்கம்

## படைப்பாளிகள்

பீ.ரீ. அஸீஸ்
அ. வையந்தி
சசிகலா ரஜீந்
இக்பால் அலி
அஷ்ரபா நூர்தீன்
கௌசல்யா
க. மங்களேஸ்வரி
தமிழ்க்கீரன்
ஏ.சீ. எம். இப்ராஹிம்
தி. லலிதகோபன்
தமிழேந்திரன்
வசந்ததீபன்
மல்லிகைவாணன்
சூசைஎட்வேட்
சி. வினோஜிதன்
சம்பூர் சமரன்
ஏ. ஜீ. எம். முஸ்இல்
நதிமதி
சிவரமணி
வி. குணபாலா
எஸ். ஆர். தனபாலசிங்கம்

மூலமும் பெயர்ப்பும் : சி. சிவசேகரம்
அஞ்சலி
நூல் குறிப்பு : காரையன் கதன்
இக்பால் அலி

வடிவமைப்பு - (Google Digital)

தொடர்புகளுக்கு,
ஆசிரியர்,
நீங்களும் எழுதலாம்
43/4, சணல் லேன்,
திருகோணமலை.
e.mail : n.ezhuthalam18@gmail.com
0778812912



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
0
0
7

## இயங்காவியலை நோக்கி நாடு

மார்ச் - ஏப்ரல்

முற்றுமுழுதாக வீழ்ச்சியடைந்த இலங்கைப் பொருளாதாரம் பல துறைகளை இயங்காத நிலைக்கு அல்லது மிகவும் மந்தமான நிலைக்கு இட்டுச்சென்றிருக்கிறது என்பதை கூர்ந்து அவதானிப்போர் உணர்வர்.

2022ல் இருந்ததைப் போன்று எரிபொருள்வரிசை, மின்வெட்டு. பொருட்தட்டுப்பாடு போன்றவற்றின் நேரடி தாக்கத்தின் காரணமாக ஏற்பட்ட அனைத்து மக்களினதும் ஒற்றுமையுணர்வின் விளைவான ஆர்ப்பாட்டங்களும் எழுச்சிகளும் இன்று இல்லை அல்லது மிகவும் தணிந்திருக்கிறது என்பதான ஒரு தோற்றப்பாடு நிலவுகிறது. ஆனால் யதார்த்தம் வேறு. சனத்தொகையில் முக்கால்வாசிப்பேர் பொருளாதார நெருக்கடியினால் அவதியுறுகின்றனர். பாதிக்கு மேற்பட்டோர் கொடூரமான **'நம்பிக்கையின்மை'** என்னும் சமூகநோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். நம்பிக்கைச் சிதைவு பிரச்சினைகளிலிருந்து தப்பியோடும் மனோபாவத்தை வளர்த்து நாட்டின் தொடர்வீழ்ச்சிக்கு வழிவகுத்துவிடும்.

இலங்கை 1948ல் அரசியல் ரீதியாக சுதந்திரமடைந்த பின்னரும் பொருத்தமான நெறிமுறைகள் பின்பற்றப்படவில்லை. கூறப்போனால் மோசமடைந்ததே என்பதே உண்மை. அதன் பின்னர் எல்லாத் தலைவர்களும் எம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இது எமது சிந்திக்கும் திறன் குறித்து கேள்வி எழுப்புகின்றது. அப்படியெனில் எமது சிந்திக்கும் திறனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழுங்கடிப்பது எது? இந்த முறைமை. இம்முறைமையினை மாற்றக்கூடிய மாற்று வழிகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

மேலும் அந்தத் தொடர் பாதகமான தெரிவுகளின் விளைவே வங்குரோத்து நிலைமை. கலை இலக்கியங்கள், அச்சு ஊடகங்கள் என்பனவும் இதற்கு விதிவிலக்கானவையல்ல.

சமூகம் பண்பாடு சார்ந்து கலை இலக்கியங்களும் வளர்த்தெடுக்கப் படவேண்டியன. இயங்குநிலைக்குட்பட்டன. இல்லையேல் அவை தேக்கமடைந்துவிடும்.

இதனாற்றான் பாரதி
"ஞாலம் முழுமைக்கும் பொதுவாய்
எந்நாளும் நிலைத்திடும் நூலொன்றுமில்லை"
என்று இயங்கியல் பேசுகின்றான்.

ஆதலினால் படைப்பாளிகளே சமூகத்தை கட்டியெழுப்புவதில் உங்களின் பணி மகத்தானது

தடைகளைத் தகர்த்து
தரவுகளைத் தேடி

**நீங்களும் எழுதலாம்**
**அன்புடன் ஆசிரியர்**

**கவிதைக்கான**
**பயில்களம்**
**பரிசோதனைக் களம்**
**காத்திரத்தின் களம்**
**கருத்தாடற் களம்**
**விளக்கக் களம்**
**விமர்சனக் களம்**
**நீங்களும் எழுதலாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகற்காயின் சுவை

என் பாதங்கள்
பதியுமிடமெல்லாம்
பரவிக் கிடக்கிறது
சோகத்தின் நிழல்கள்
எட்டி வைக்கும்
ஒவ்வொரு அடியும்
எழுதிச் செல்கிறது
துயரத்தின் பதிவுகளை

மகிழ்வு தேடும் உணர்வுகள்
கண்களை இறுக மூடிக்கொண்டு
இதயத்தின் கதவுகளை
தாழ்ப்பாழிடுகிறது.
தோல்வியின் படிக்கட்டுக்களில்
உறக்கத்தை எதிர்பார்த்து
உணர்வின்றி கிடக்கிறது மனது

இலக்குகளை அடைவதில்
உற்சாகம் குறைந்து செல்கிறது
வேதனை விதைகள்
விபரீதமாய் வியாபித்துச் செல்கிறது
என்றைக்குத் தீரும் இந்த இயலாமை
ஏங்கித் தவிக்கும் உள்ளத்துள்
பாகற்காயின் சுவைகள்

பீ.ரீ.அஸீஸ்
கிண்ணியா

**படைப்புக்களில் வரும் கருத்துக்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பாளிகள். படைப்பை செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த சாம்ராஜ்ஜியம்

அந்த சாம்ராஜ்ஜியம்
சற்று வித்தியாசமானது
அபூர்வமானது....!

அங்கே
மூடர்களும்
கயவர்களும்
நுழைந்து கொள்ள முடியாது...!

அங்கே
ஏழை
படித்தவர்
நுழைந்து கொள்ள அனுமதி
தேவையே இல்லை....!

அங்கே
சாதி
பணம்
மதம்
இவற்றின் அதிகாரம்
இருக்காது....!

அங்கே
சமத்துவம்
நீதி
கல்வி
இவற்றின் குரலேயன்றி
வேறெதுவும் இருக்காது....!

நீங்கள் நினைப்பது போல்
அந்த
சாம்ராஜ்யத்தை எல்லோராலும்
உருவாக்கி விட முடியாது....!

அதனால்தான் சொல்கிறேன்...!
அந்த சாம்ராஜ்ஜியம்
சற்று வித்தியாசமானது...!
அபூர்வமானது....!

-அஸ்வினி வையந்தி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநாதரவாக

பூட்டி வைக்கப்பட்ட
அலுமாரி
புதிதாகவே
பரிணமிக்கும்
வரிசை வரிசையாய்
அடுக்கப்பட்ட புத்தகங்கள்....!

இதுவரை
எவரது விரல்களும்
ஸ்பரிசிக்காத
புதுமைகள்.....!
காற்றுக்கூட
புகமுடியாத
கதவுகளுக்குள்ளே
காலத்தின் பெறுமதிகள்....!

கைபேசிகள் கரங்களைப்
பற்றிக் கொண்டதால்
ஓரமாய் ஒதுங்கக்
கற்றுக் கொண்ட
காகித ஏடுகள்...!

எண்ணற்றவை
எண்ணங்களை
தெளிய வைப்பவை – ஏனோ
கறையான்கள் மட்டுமே – அவற்றை
காதலிக்க கற்றுக் கொண்டன....!

இப்போது
புரிகிறது....!
பெறுமதியறியா
பொக்கிஷங்கள் மட்டுமே...
அநாதரவாக....?

திருமதி. சசிகலா ரஜீந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறிந்த கைகளை ஒட்ட வைப்போம்

முறிந்த கைக்கு
உருக்குப் பத்துப் போட்டதால்
ஒட்டிக் கொண்டு வரும் எலும்பு
மீளவும் தாக்குப்பட்டு உயிர்
பெரும் வேதனையால் ஊசலாடுகிறது.

திடீரென பெய்யும் கன மழையினால்
தேங்கி நிற்கும் ஊத்தைக் கழிவுகள்
வெள்ளத்தால்
அடித்துச் செல்லப்படும் தெரு நாற்றங்கள்
வழிமறித்த அணை கட்டி
வான் கதவுகள் போடப்பட்டுள்ளன.

கைகள், கால்கள் முறிந்து
மீளெழுந்து நடக்க முடியாமல்
பலத்த வலிகளுடன் பத்து போட்ட
தேசத்தின் ஆசனத்தில்
அமர்ந்து பத்திக் கொண்டிருக்கும்
நெருப்பிலேயேதான் இன்னுமின்னும்
நாங்கள் தப்பித்துக்கொள்ள முடியாமல்
வெந்து கொண்டிருக்கின்றோம்.

கைக்கூலிகளுக்காய்
குருட்டு வௌவால்களை
விலைக்கு வாங்கி
அச்சுறுத்தல்கள் விடுத்து
அதன் மேனியின் மேல் பச்சையைக் குத்தி
மிகப் பயங்கரமான பிசாசுகளாய்
படம் காட்டுகிறார்கள்.

ஊடகங்களின் முதலை வாய்களுக்கு
பண முடிச்சுகள் போடப்பட்டு
இரும்புப் பூட்டுகள் போடப்பட்டுள்ளன.
ஆதலால்தான் அவர்களுக்கு
உண்மை பொய்
பேசத் தெரியாது
இங்கு அவர்கள்
வெறுமனே நடிப்பையும் நாடகத்தையும்
காட்சிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரமான முறையில்
மனங்களை உடைக்கின்ற
சேறுகளைப் பூசி அதிர்வுறும்
மின் வெட்டுக்கள்
இடி முழக்கத்துடன்
எங்கேயோ ஓர் அப்பாவிகளின் தலைகளின்
மேல்விழுந்து வெடித்துக்
கருகி சாம்பலாகி விடும் நிலைமைதான்
இங்கு மேடைக் காட்சிகளாய் உள்ளன.

இது ஆட்சியின்
இருப்பை தக்க வைத்துக் கொள்ள
இருட்டுக் குகைக்குள்
மனிதப் பகைகளைத் தூண்டி
தினசரி கொண்டாடும்
திரு விழாவில் பிம்பமாய் உருவெடுத்து
ஒவ்வோர் முறையும் தேர்தல்கள் நடத்தும்.

விபத்தில் மோதுண்டு
தலை மண்டையோடுகள்
வெடித்து மூளை சிதறிப் போய்
கால்களுக்குள் மிதிபடும்
தலைமையிலான தலைகளுக்கு
உடனே வைத்தியசாலையில்
அவசர சத்திர சிகிச்சையளித்தல் வேண்டும்.

துருப்பிடித்த வெறித்தனங்களை
தலையில் இருந்து அகற்றி
மனித வாழ்வின் விடியலுக்காய்
உடைந்த கைகள் கால்களை
உருக்கி ஒட்ட வைப்போம்.
வைரப் பத்தும்
ஒத்தனம் போடுவோம்.
மீண்டும் எழுந்து நடப்போம். வாருங்கள்.

- **இக்பால் அலி** -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனம்

மாப்பிள்ளை
சீதனம் வேண்டாம் என
மறுத்துவிட்டார்
விவாகப்பத்திரத்தில்
ஒரு லட்சத்து ஒரு ரூபாய்
மஹர் பதியப்பட்டது

அழகான, படித்த இன்ஜினியர்
மாப்பிள்ளை,
நடுத்தரவர்க்கம்
மார்க்கமும் படித்தவர்

பக்கத்து சிறிய வீட்டின்
வனப்பான பாத்திமாவுடன்
மாப்பிள்ளைக்கு ஈர்ப்பு இருந்தது
கூடப்படித்த
கூலிக்காரன் மகள் சல்மாவிலும்
ஓர் கண்ணிருந்தது

எனினும் முற்போக்கு இன்ஜினியர்
ஆழமாக யோசிக்கிறார்.

கேட்டு வந்த
புதிய இடத்தைத் தெரிவு செய்தார்.
திருமணம் முடிந்து தன்
தாய் விட்டில் வாழ்ந்தார்

சீதனம் வேண்டாம் என்ற
மாப்பிள்ளை மீது
மாமாவுக்கு கோபம்
படிச்ச மடையனா இருக்கானே
என அலுத்துக் கொண்ட போது

மாமிதான் கூறினார்
ஒத்தப்புள்ளக்கி
மாளிகையா வீடும்
காரும் நகையும்
வாங்கில ஏராளமும் சேர்ந்துட்டு
அவளுக்குத்தானே எழுதிடப்
போறீங்க

மாப்பிள்ள படிச்ச புத்திசாலிங்க.

-அஷ்ரபா நூர்தீன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்மொழிப் புத்தகங்கள்

ஆரம்பமாய் அரிவரியில் அணைத்தோமே
அனைத்தும் அதில் உள்ளதாய்
எண்ணினோமே
அன்புடன் ஆற்றலைப் பெருக்கினோமே
அளவளவாய் ஆழ அகலம் அறிந்தோமே
அகவையுடன் அறிவையும்
அதிகரித்தோமே
அசலான ஆசிரியம் கண்டோமே
அப்பழுக்கற்ற அகத்தூய்மையை
அடிமனத்தே கொண்டோமே
அங்கலாய்ப்பை நிறுத்தி மனமதை
ஒன்றித்தோமே
அவசர உலகின் அழுத்தம் அறிந்தோமே
அத்தியாவசியம் எது என்பதை
அதன் வழி உணர்ந்தோமே
அரிய விடயம் பல விளக்கி,
அகவையற்று அத்துமீறிய திறனை,
அகத்தே அசலாய் வைப்பவை,
அச்சடிக்கப்பட்ட பனுவல்களே....

பகுத்தறிவை பன்மையாக்கிடும்
பல பொருளை அறிய வைக்கும்
பண்பைப் பக்குவமாக்கிடும்
பாமரரைப் புரிய வைத்திடும்
பணிவைப் பராயத்தே கொண்டுவரும்
பக்தியை பலமாக்கிடும்
பக்காவாய் பிறர் கருத்தை புரியவைக்கும்
பதிலளிக்க பல தெரிவை சொல்லித்தரும்
பட்டாம் பூச்சியை இகம் சுற்ற வைத்திடும்
பரவசக் கடலில் ஆழ்த்திடும்
பட்டெனப் பகராது பல முறை
சிந்தனையைத் தூண்டிடும்
மானுட சிந்தையை சிறப்பாக்கி,
மகிழ்விக்கவல்லவை
பன் மொழிப்புத்தகங்களே.......

-கௌசல்யா-
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் நண்பன்

நண்பா!
உனக்கொரு கடிதம்

என்னுள் விழித்துக் கொள்
என்னைத் தொட்டுத் திருப்பு

உன் வழி கொண்டு
என் வரி தேடு

அவைகளுள் ஆராய்ந்தவற்றை
சற்றுத் தர்க்கித்துக் கொள்

மடமைகளை
களைந்து விட

அவைகளுக்குத்
தாழ்ப்பாள் போட்டு
தத்துவார்த்தம் பேசு

நண்பா!

என்னைப் புரட்டிப்
பார்த்தவர்கள்தான்
இவ்வுலக வரலாற்றையே
புரட்டிப் போட்டவர்கள்

அதனால்
என்னை முழுவதுமாகப்
படி!

நான் ஆயிரம் சிறைச்சாலைகளை
அடைக்கிறேன் - நீ
ஒரு அறிவுக்கதவையேனும்
திறந்து விடு

இப்படிக்கு - உன்
நண்பன் புத்தகம்.

**-கதிரவேல் மங்களேஸ்வரி-**
**திருகோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழி மாறும் நதி

பாய்ந்து வரும் நதியல்ல இது
பாதை மாறிய நதி
பாறை மோதும் நதியல்ல இது
பாடு இழந்த நதி

நல்நெறி நாடா நதி
நாசங்கள் நாடும் மதி
தனக்கு அதுவே சரியெனத்
தானே எழுதும் விதி

குதித்து ஓடிக் குவலயம் தன்னைக்
காக்க வேண்டிய நதி
குடித்துக் கும்மாளம் போட்டுக்
குலத்தை இழக்கும் நதி

தாவிப் பாய மறந்து
தடம் மாறிப் போகும் நதி
நீதி வழியில் இருந்து
நீசம் மோகிக்கும் நதி

சீர்தரும் கல்வியை நாடாமல்
சீரழியும் நிலையைத் தேடும் நதி
சிந்தனைச் சீர்திருத்தம் செய்யாமல்
சிற்றின்பம் தேடும் நதி

நூலும் எழுது கோலும்
புறந்தள்ளும் நதி
அலைபேசிக்குள்ளே ஆழ்ந்து
தொலைந்து போகும் நதி

ஆசிரியர் சொற்கள் வசையென்று
மாசில் தோயும் நதி
முன்னேற்றப் பாதை துறந்து
முகநூலைத் தேடி ஓடும் நதி

இலட்சியம் அறியா நதி
இலக்கினை மறந்த நதி
எப்படி வளைந்து ஓடுமோ?
ஏற்றந்தான் வாழ்வில் காணுமோ

- தமிழ்க்கீரன் -
கல்மடு, கல்குடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காழ்ப்புணர்ச்சியின் கழிமுகம்

பாய்விரித்துப் படுத்திருந்த பாடசாலைக்
காலமது
வாய்விட்டுச் சொல்வதற்கு வார்த்தைகளோ
ஒன்றுமிலை
தாய்வீட்டுச் சீதனமாய் தாங்கியவை
ஏதுமின்றி
காய்நகர்த்திக் கேட்காது காரிருளில்
நானிருந்தேன்.

கண்திறந்து பாராமல் கருவறையில் இருந்தது
போல்
கற்பனைகள் ஏதுமின்றி கானலிடை
உலவிவந்தேன்
எண்ணி லடங்காத ஏக்கம் பல
கொண்டு
மண்ணில் மறைந்த கதை மாயமென
மறைந்த தம்மா!

ஆட்சியதிகாரம் அடிதொழுது
வந்தவிதம்
பேச்சுக்கு மூச்சு பெரிதான கதை
யாவும்
ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஏமாந்து
நின்றதன் பின்
ஆட்சிக்கு வந்தவர்கள் அத்தனையும்
மறந்து நின்றார்!

ஓடி உருக்குலைந்து ஓரணியில்
நிற்காது
ஒழுங்கு நிலைகுலைந்து அழுக்காறு
கொண்டதனால்
நாடியவை நல்லவைகள் நடக்காத
நாட்டினிலே
தேடிய தேட்டமெல்லாம் தெருநாயாய்
போனதன்றோ!

அழுது புரண்டாலும் ஆணவமே
வாழ்வென்று
தொழுது வணங்காது தூரமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுங்கி நின்று
எழுதிப்படித்தாலும் இழிநிலையில்
வாழ்கின்றார்
பொழுது விடிந்தாலும் பொய்யிருட்டில்
தாழுகின்றார்!

ஏங்கியிரங்கி எச்சிலையில்
நக்குண்டார்
மாந்தி மடிவீழ்ந்து மன்றாடி
அலைந்தவர்கள்
நீங்காத காழ்ப்புணர்ச்சி நிலைகொண்ட
நெஞ்சோடு
தூங்காது வசைபாடி துணிந்து
நடக்கின்றார்!

நம்பக் கழுத்தறுக்கும் நயவஞ்சகக்
கூட்டமென
நல்லவைகள் மறந்திட்ட நலம்குறைந்த
நாடாச்சே
எண்பிக்க முடியாத எத்தனையோ
உண்மைகள்
எம்பிக்கள் கைகளினால் இழிநிலையில்
பாழாச்சே!

படிதாண்டாப் பதிவிரதைப் பத்தினியர்
கூட்டமென
பார்புகழ வாழ்ந்த எங்கள் பாவையர்
தேட்டங்கள்
மடியேந்தி மனம்நொந்து மத்திய
கிழக்கினிலே
மதியிழந்து கதிகலங்கி மகிழ்விழந்த
வாழ்வாச்சே!

கல்நெஞ்சங்கொண்ட கயவர்கள்
களம் காணும்
சொற்பஞ்ச மில்லா சோடனைகள்
தோணுமிந்த
நெல்விளையும் பூமியிலே நேர்மையினைத்
தான் மறந்து
நீண்ட பயணமது நிலை குலைந்து
போனதன்றோ!

ஏ.சீ.எம்.இப்றாஹீம்,
கிண்ணியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசோதனைக் கவிதை

கொழும்பு கோட்டை காலை 06.05
கம்பங்களின் எதிரோட்டத்தில்
வலசை தேடுகிறது ஞாபகத்தின்
கொப்புகளை
அடுத்த தரிப்பில் வழமைக்கு
மாறான
ஒருத்தியின் இருக்கையில்
அமரக்கிடைத்த நாழியில்
ஆசுவாசமுறும் பருவகால சிறகுகள்
குறுநேர தரிசிப்பில் இலவசமாகும்
முகங்களின் பரிமாற்றங்களில் இனி
முந்தைய பருவகால பயணத்தின்
இரைமீட்பு
"வடை வடை" என்றோர் குரல்
இரைப்பையில் சுரமீட்ட
எதிரொலிக்கும் பக்கத்தில் பறவை
திரும்புகிறது தொன்மத்துக்கு
காகத்தை வலசையாக தரிசிக்கும்
கணத்தில் நினைவில் எழுகிறது
கண்ணாடியை வீட்டில் வைத்து
விட்டு வந்தது.
கல்கிசை 6.25

- தி.லலிதகோபன் -

(பயணிக்கும் கவிதை சொல்லி புத்தகத்தை வாசித்துக்கொண்டிருக்கையில் வலசைப் பறவை ஒன்றின் பயணம் பதிவாக, இடையே ஒரு பெண் ஏறி எதிர் இருக்கையில் அமர வடை விற்பவனின் குரல் பசியைத் தூண்ட வலசை காகமாக மாறிவிட்ட கணத்தில் காட்சிப்பிழைக்கு காரணமாக கண்ணாடியை எடுத்துவரத் தவறியமை புலனாகியது.)

களங்களை விரித்துள்ளோம்.
ஆக்கங்களை அனுப்புங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லாமல் இருத்தல்

இல்லாதிருந்த
இடைவெளியில்
நாம் என்பதை
உருவாக்கிக்கொண்டோம்.

இனித்தொடங்கின
பிரசார காலங்கள்.

அலைந்துழலும்
நாய் தன் மேனியில்
சாம்பலை பூசிக்கொண்டதுபோல்
இக்கணம் முதல்.

நாய் என்பது
இருமையுமில்லை
சாம்பலும் தனிமையில் இல்லை.

இருந்தும் இல்லை
இல்லாமலும் இருத்தலில்
அலைகிறது நேசம்.

-லலித்தா-


**வெளிவந்துள்ளது**

**எஸ்.ஆர்.தனபாலசிங்கத்தின்**



**ஆடுகளும் ஓநாய்களும்**

**(கவிதைத் தொகுதி)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிதலும் ஒளிர்தலும்

சமூகத்தில் குவிந்து கிடக்கும்
குப்பைகளையும்.... சகதிகளையும்....
மூக்கை அரிக்கும் நாற்றத்தைத் தரும்
அழுக்குகளையும்... எரித்துச்
சாம்பலாக்குவதற்காக....
பழைய காகிதங்களைத் தேடினேன்...
அதிகபட்ச உற்சாகமாக...!

என்னால் எழுதிக் குவிக்கப்பட்ட
சான்றிதழ்களும் விருதுகளும்
கைகொடுத்து உதவின....
அழகாக...!

என் எழுதுகோலோ
இவற்றை எரிய வைப்பதற்கான
இன்னுமோர் தீக்குச்சியாக
உதவியது...
"என் இனிய நண்பனாக....!"

ஒன்றுக்கும்
உதவாதவை என என் இழிவான
மனதால் விமர்சிக்கப்பட்ட
அவையனைத்துமே அந்த அர்த்த
இராத்திரிப் பொழுதுகளில் எரிந்து
சாம்பலாகிக் கொண்டிருந்தன
முற்றாக...!

அவ்வேளையில்....
என்பாழ் பட்ட வளவு மட்டுமல்லவே
அண்டை அயல்களும் வெளிச்சம்
பெற்றதாக அறிவு வெளிச்சம்
உள்ளவர்கள் என்னிடம் எடுத்துச்
சொன்னார்கள்....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த போதும்.....
தெற்காசியப் பிராந்தியத்திற்கு
மட்டுமல்லவே உலகத்திற்கே
அதிசய வெளிச்சமாக
விளங்கிய யாழ் நூலகமே
அன்று தீப்பற்றி எரிந்ததாக
விமர்சித்த என் உள்ளம்
கொக்கரித்துக் கொண்டாடி
மகிழ்ந்து மன நிறைவாக....!

இறுதியாக சூரியகதிர் மூளைப்
பிராந்தியத்துக்குள்ளே பாய்ந்த
போது....
நரகமயமான என்மனதுக்கு...
இதுபற்றி இடித்துரைத்தேன்...
பின்வருமாறு...
வெகு துணிவாக...!

"நீதான்
முதலில் எரிந்து சாம்பலாக வேண்டிய
நீ...!"
"நீ
எரிச்சல் புகைச்சல் பட்டு
எப்போதும் பொறாமைப்பட்டு
எரித்தல் செய்யும் அந்த அழிவுக்கு
மத்தியிலும்...
புரட்சிகரமான ஒளிர்தலைப்
படைத்து வைத்திருக்கின்றது
அந்த இயற்கை....!!"

**-விவேகவெளி தமிழேந்திரன்-**

---

**புனைபெயரில் எழுதுவோர் தமது சொந்தப் பெயர், முகவரியினையும் குறிப்பிடுதல் வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழலைப் பின்தொடர்ந்து

பன்னீராய் தூறிச் செல்கிறது மழை
நாடியில் கையை வைத்துக்கொண்டு
கருகுகிறான் விவசாயி
தரையெல்லாம் வாய் பிளந்து
யாரையெல்லாம் விழுங்கலாமென்று
கிடக்கிறது
விஞ்ஞானம் மெய்ஞானம்
அஞ்ஞானம் தன்ஞானம்
எஞ்ஞானம் எம்மைக் கடைத்தேற்றும்
விம்மித் திணறுகிறான்
தொண்டைக் குழியில் வார்த்தைகள்
சிக்கிக்கொண்டன
துக்கம் அவளைப் பிய்க்கின்றது
அழகிய முகம்
விழிகள் துள்ளுகின்றன
உதடுகள் கூம்பியிருக்கின்றன
உறுமீன் வருவதைக் காணோம்
ஒற்றைக் காலில் நின்றது போதும்
கிடைப்பதைத் தின்று பசியாற்றுகிறேன்
உடல் உண்டு
உயிர் உண்டு
உருப்படியாய் ஒன்றும் செய்யவில்லை.

-வசந்ததீபன்-

## ஆழ்ந்த அஞ்சலிகள்

✦ பத்திரிகையாளர் பொ.மாணிக்கவாசகம்
12.04.2023

✦ எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகன்
24.04.2023

✦ எழுத்தாளர், ஊடகவியலாளர்
கலைவாதி கலீல்
09.06.2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் அறிமுகம்

# கனகசூரியம் யோகானந்தனின் "காற்றுக்குத் தூதுவிட்டு....."

இதுவரை மூன்று கவிதை நூல்கள் உட்பட நான்கு நூல்களை வெளியிட்டுள்ள யோகானந்தனின் ஐந்தாவது வெளியீடாக 'காற்றுக்குத் தூதுவிட்டு...." கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

"தான் சார்ந்த மண்ணினதும் மக்களினதும் பண்பாட்டு அம்சங்களை (அன்பு. காதல், ஏக்கம், வறுமை.....) வெளிப்படுத்த கவிதையினை ஒரு நல்ல ஊடகமாக யோகானந்தன் இனங்கண்டுள்ளார்....... சிறந்த கவிதை உருவாக அறிவும் உணர்வும், உழைப்பும் முயற்சியும், தேவையும் நோக்கமும் வேண்டும். யோகானந்தன் இயல்பாகவே இவை வாய்க்கப்பெற்றவர்........"

என அணிந்துரையில் தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் ஏ.எப்.எம்.அஷ்ர.்.ப் குறிப்பிடுவது அவதானத்திற்குரியது.

உதாரணத்துக்காக ஒன்று
"ஏழ்மையின் முகங்கள்
தேசக்கூடாரங்களில்
உறக்கம் கொள்ளும்
ஆண்டவனும் வருவதில்லை
ஆள்பவனும்
எட்டிப் பார்ப்பதில்லை"



யோகானந்தன் ஈழத்தமிழ்க்கவிதையுலகிற்கு சிறந்த படைப்புக்களைத் தரவேண்டும் என்பதே பலரது எதிர்பார்ப்பாகும்.

விலை. 600.00
தொடர்பு : 077 3605569



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பவுணர்வு

மலர்க் கரம்
கொண்டொரு...
கவி வடி(த்)-தேன் இதழ்
சொட்டும் - பூ முகம்
சட்டென சிரித்து – மெல்ல
தொட்டுத் தடவும் - அவள்
கைவிரல் கூந் (தலை)
பட்டென திரும்பும்
விண்மீனை ஒத்த அவள்
பூ விழி நோக்கிடின்
காந்தக் கவர்ச்சி – போல்
ஈர்த்து இழுத்த (தாய்)
என்னுள் ஒரு மயக்கம்
மண்ணை நோக்கி – பின்
விண்ணையும் ..... நோக்கினேன்.
என்னுள் ஏதோ...!
இன்ப உணர்வு....
இன்று வரை தொடர்கிறது.

-மல்லிகைவாணன்-
திருகோணமலை

# தெருக்குரல்

* கல்லெறிந்தானுக்கு கனி கொடுக்கும்
மரம் மனிதனோ
சொல்லெறிந்தாலே கல் எறிவான்

* போதை இன்பத்தில் மூழ்குவார்க்கு
இருக்கும் கவலை
நீடித்து நிலைக்கவில்லை என்பது.

* அறிவற்ற தாயின் பாசம் உலகெங்கும்
நெறியற்ற பிள்ளைகளைத்தான்
உருவாக்கும்.

- சூசை எட்வேட்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் தொடர்ச்சி.......

# நீங்களும் எழுதலாம் கவிதைத் தொகுப்பு

கவிஞர் ஆர்.பாலகிருஸ்ணன் அவர்கள் "எதிர் பார்க்கலாமா" எனும் தலைப்பில் எழுதிய கவிதை வரிகள் இன்றைய நாட்டின் அரசியல் நிலவரம் குறித்துப் பேசுகின்றன. இதனைக் கண்டு கவிஞரின் நெஞ்சம் குமுறுகிறது.

நாடாளுமன்றத்தை
நகைச்சுவை மன்றமாக்கி
சிரிப்பாய் சிரிக்கும் நாட்டில்
நல்லாட்சியை எதிர்பார்க்கலாமா?
வெள்ளை வானை ஏவி
கண்ட இடத்தில் கடத்த
கட்டளையிட்டு விட்டு
நீலிக்கண்ணிர் வடிப்போர்
வாழும் நாட்டில் நீதியை எதிர்பார்க்கலாமா?
ஊடகவியலாளர்களின்
உயிரைக் குடிக்கும்
குள்ள நரிகள் வாழும் நாட்டில்
பாதுகாப்பை
எதிர்பார்க்கலாமா?

நாட்டின் உண்மை நிலவரத்தை வெளிப்படையாகவே கூறும் கவிஞர் நாட்டினுடைய விமோசனத்திற்காகவும் ஏங்கி நிற்கிறார்.

இந்த இதழ் தொகுப்பு பற்றி பேராசிரியர்.செ.யோகராசா தனது அணிந்துரையில் குறிப்பிடும் போது "நீங்களும் எழுதலாம் இதழ் எஸ்.சத்தியதேவன், தி.காயத்திரி, அருளானந்தி விஜயராஜ், ம.கம்சி, வே.சசிகலா, கோ.தர்சனி, வி.ஆர்த்திகா, சூ.யுவன், புவிலக்ஷிமி, பாரதி புத்திரன் (தமிழேந்திரன்), வி.கௌரிசங்கர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவெல், ஜெனித்தா மோகன், துஸாந்தி பரமநாதன் முதலிய இளைய கவிஞர்களை ஈழத்து நவீன கவிதையுலகிற்கு அறிமகப்படுத்தியுள்ளது." என்று குறிப்பிட்டுள்ளார்.

இக்கவிதைத் தொகுப்புக்குள் சமூகம் பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள், மனித மனதிலுள்ள சலனங்கள், இயலாமைகள், காதல் உணர்வுகள், அரசியல் எதிர்பார்ப்பு, இயற்கை உள்ளிட்ட சமூகம் சார்ந்த பல விடயங்களைக் கூறும் நல்ல கவிதைகளும் உள்ளன என்று குறிப்பிட்டுக் கூறலாம்.

468 பக்கங்களைக் கொண்ட இத்தொகுப்பில் 175 கவிஞர்களுடைய கவிதைகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒட்டுமொத்த இளைஞர் சமூகமும் சமூக ஊடக கலாச்சாரத்திற்குள் சிக்குண்டு இருக்கிறது. வாழ்வில் நடக்கும் அபத்தங்களை அல்லது அங்கதங்களை அல்லது நேர்மறையான செயல்களை நெருங்கிப் பார்த்து திளைத்தல் என்பது இல்லாமல் போய்விட்டது. எதை எடுத்துக்கொண்டாலும் ஒரு படம் பிடித்து சமூக வலைத்தளத்தில் போட்டால் அந்தப் படம் என்ன படம் என்று பார்க்காமலே லைக் பண்ணி மகிழ்வுறுகின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் கவிதைத் துறையில் எழுத்தாற்றலை இளம் கவிஞர்கள் மத்தியில் ஊக்குவிப்பதற்கான ஒரு முயற்சியை "நீங்களும் எழுதலாம்' எனும் கவிதை இதழின் மூலம் பெரும் எண்ணிக்கையிலான இளம் கவிஞர் வட்டத்தை உருவாக்குவது என்பது சாதாரண விடயமல்ல.

நீங்களும் எழுதலாம் எனும் இதழின் மூலம் இளம் கவிஞர்களுடைய போற்றத்தக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்தெடுக்கப்படவேண்டிய உணர்வுகளுக்கு களம் அமைத்துக் கொடுத்துள்ளமை இத்தொகுதி இன்னுமொரு வெற்றியாகக் கருதப்பட்டாலும் தொலை நோக்கில் தமிழ் கூறும் நல்லுலகின் பிறிதொரு மைல்கல்லாய் திகழவே செய்கிறது என்று கூறுவதில் மிகையாகாது.

இக்பால் அலி
நன்றி தீம்புனல் (மின்னிதழ்)
17.12.2022

## பயில்களம்

### நான் மறைய நீ

அன்று நான் வந்த நேரம்
உன்னைப் பார்க்க நினைத்தேன்
பார்த்தேன் உன்முகத்தை - ஆனால்
முழுமையாக அல்ல
நீ விலகிச் செல்லும் வேளை
பார்த்திடுவேன் என நம்பினேன்
மறையும் நுனியில் நான்!
தோன்றும் நுனியில் நீ!

### வேடிக்கை

பாத்திரம் கழுவக் கூடாதென்றனர்
தேநீர் ஊற்றக்கூடாதென்றனர்
வீடு பெருக்கக்கூடாதென்றனர்
புரட்சிக் கொந்தளிப்புடன்
ஒதுங்கிக் கொண்டேன்
பாவம்! என் தாய்!
யாரும் அவளுக்கு உதவவில்லை
கண்டதெல்லாம் செய்வார்கள் இதற்குள்
ஆண்வேலை பெண்வேலை என்பர்
வேடிக்கையோ வேடிக்கை!

சிவகரன் விநோஜிதன்
யா/ஹாட்லிக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அறிமுகக் குறிப்பு

# தி.லலிதகோபனின் "காலாறப்போனவள்"

### வெற்று வனாந்தரம்

பழங்களைக் காண்கையில்
வௌவால்களை விதைக்கிறேன்
மனதெங்கும்,
விழுங்கி துப்பிய எச்சங்களால்
நிறைகிறது மனது.
கனிகள்;
விதைகள்;
விதைகள்;
கனிகள்;
நிஜங்களை உதறி
கனவுக்குள் நுழைகிறேன்
இப்போது
வனமெங்கும் வர்ணப் பட்சிகள்
பருவகால முடிவில்
பட்சிகள் கலைந்துவிட
இப்போது
மனசு ஓர் வெற்று வனாந்தரம்.
அறையெங்கும் விரவிப்பரவும்
பீடிப்புகை
மேக வெளியென மிதக்கையில்
நான் எதிரொலிக்கிறேன்
வௌவால்களின் சிறகடிப்புகளை.
பட்டு முறிந்த
எதிரொலிகளின் உதிரிகளில்
அகவணக்க பாடலொன்றை
மீட்டியபடி நகரும் நிகழ் கணங்கள்.

இது கவிஞர் லலிதகோபன் அவர்களின் "காலாறப்போனவள்" கவிதைத் தொகுப்பில் எழுபத்து ஐந்தாவது பக்கத்தில் வரும் கவிதை ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சக்கரவர்த்தி சுதாகர் அவர்களின் பார்வையையும் "தாயதி" பதிப்பக உரிமையாளர் தில்லை அவர்களின் பார்வையையும் கடந்து கவிதைகளுக்குள் செல்லும்போது கொஞ்சம் இல்லை அதிகமாகவே என்னை நான் சுயமதிப்பீடு செய்ய வேண்டும் என்பது போல விரிந்து கிடந்தன கவிதைகள்.

வீட்டுக் குருவி ஒன்று பசியில் வந்து இரையைத் தேடும் நிமிடங்கள்
நெல்,அரிசி,பயறு,குறுநெல்,
சோற்றுப்பருக்கைகள் இல்லாமல்

நெல்லு மூட்டை, அரிசி மூட்டை, பயறு மூட்டை, மூடிய சோற்றுப் பானை இருந்தால் எப்படி இருக்கும். தன் சின்ன அலகுகளால் பசியாறிவிட அதனால் உடன் முடியுமா? இல்லை தானே.

அதனால்தான் காலாறப்போனவளை மீண்டும் மீண்டும் காதலிக்கச் சொல்லியது மனம்.

சொல் விளையாட்டுக்களை தனது மன ஓட்டத்தின் ஆழ்ந்த பார்வைகளுக்கு ஏற்ப வித்தைகளை புரியும் கவிஞர்கள் தங்களின் புதிய சுயமாக அவற்றை அடையாளம் காட்டி நிற்கும் போது அவர்களுக்கான வாசர் பரப்புகளும் புரிந்துணர்வுகளின் அடிப்படையில் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது.

தேத்தாத்தீவு மண்ணை பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் வாழ்ந்து வருகின்ற கவிஞர் வாசிப்பிலும், வாசிப்பு தேர்விலும் தன்னை அதிகம் ஈடுபடுத்தி இருப்பது அவருடைய கவிதைகளுக்கான சொற்களில் ஆழமாகவே தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதியர் சேவையில் இருக்கின்ற உயிர்கூட்டை காருண்யத்தில் ஊன்றிப் பார்க்கின்ற லலிதகோபன் அவர்களின் பார்வையை இலகுவாக கடந்து விட முடியாது.
நான் மேல் சொல்லிய கவிதையை வாசித்துக் கடந்து தொகுப்பின் இறுதி கவிதையான பாலையை கண்டுகளித்து மகர்வாஜாவின் கதையை நினைவிலும் அழைத்து மீண்டு தொகுப்பை மூடி வைத்த பின்னும் "வெற்று வனாந்தரம்" மனதில் பல கேள்விகளை எழுப்பியே நிற்கிறது.

எப்போதும் கவிதை வாசகரின் மனநிலை பொறுத்தே தன் இருப்பை உறுதியாக்குகின்றது என நம்புபவன் நான். அதன் வழியில் "காலாறப்போனவள்" தொகுப்பில் ஒரு புதிய அனுபவத்தையும் நடப்பியல் நிதான மனநிலையையும் கற்றுக் கொள்கின்றேன்.

'காலாறப்போனவள்' கைக்குள் அடக்கமாக வடிவமைக்கப்பட்டிருப்பது மனதிற்கு மிகவும் பிடித்திருக்கிறது.

-காரையன் கதன்-

தொடர்பு : 0777697050

---

கிடைக்கப்பெற்றோம்




நூல் : உறவுகள் சொல்லும் உணர்வு (சிறுகதைத் தொகுதி)

ஆசிரியர் : கதிர் திருச்செல்வம்

விலை : ரூ.500.00
தொடர்பு : 0772908990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதிவிட

கருமை பூசிய கங்குல் நேரத்தில்
திரவக் குறைவால் தடைப்பட்ட மின்சாரம்
அங்கு அலைந்த மின்மினிப் பூச்சிக்கு
மின்குமிழை பொருத்தி விட்டதாக
நினைத்தேன்...

என் மேசையில் விரித்திருந்த புத்தகத்தின்
மத்தியில் உறங்கிய பேனாவின் தாகம்
இன்னும் தீரவில்லை போலும்
இன்னும் ஏதோ சொல்லிட வேண்டும் என்றோ
வீசும் தென்றலின் அசைவில் தாளில் புரள்கிறது
என் விரல்களின் பிணைப்பை வேண்டி....

சாளரக் கதவினை அனுமதியின்றி
திறந்து சாரல் வீச
காற்றுக்கு அதிகாரம் கொடுத்தது யார்?
எல்லை மீறிய அந்த தென்றலின் இதம்
எழுத்துக்களில் சுகம் தந்ததோ
என்னே விந்தை!
எழுத்துக் கோர்வை கைகளை
கோர்த்திடக் கண்டேன்....

-சம்பூர் சமரன்-

# நீதானேஎன் உயிர்

மலடியென்ற பழி நீங்க
மாதவங்கள் பல செய்தேன்.
மரகதம் போல் வந்துதித்து
மனதிருள் நீங்கச் செய்தாய்.
உலகினில் வாழ்ந்ததற்கு சான்றளிக்க
உற்ற துணை நீ செய்தாய்
கோடிச் செல்வம் கொட்டிக் கிடப்பினும்
குழந்தாய் உனக்கவை ஈடாகுமா?
இனியென்ன எனக்கு வேண்டும்
நீதானே உன் உயிர்.

-ஏ.ஸீ.எம்.முஸ்இல்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் மந்தைகள் அல்ல

நாங்கள் மக்கள் அல்ல
மந்தைகள் என்பதுதான்
இந்த - எல்லோரின்
சிந்தைகளிலும் இன்று...
***
இவர்களோ மேய்ப்பர்களாய்
நாங்களோ மேய்க்கப்படும்
ஜந்துகளாய்...!
***
கல்லும் பொல்லும்
கொல்லும் வாளும்
மேய்ப்பாளர்களின் மேய்க்கும் கரங்களில்...!
***
பணப் பேய்களும்
பிண வாடைகளும் மேய்ப்பிலிகளின்
மாய்க்கும் கால்களில்...!
***
நாங்கள் இப்போதெல்லாம்
பலிக்கடாக்களாய்
மேய்க்கப்பட்டுக் கொண்டிருப்பதோ...
பசுமை நிலங்களில் அல்ல...!
***
பாலை நிலங்களில்...
பாழான பள்ளத்தாக்குகளில்...
பலியெடுக்கும் கிடங்குகளில்...!
இன்னும் அந்த
செங்குத்தான சரிவுகளில்...!
***
நகரும் வழிகளோ தெரியவில்லை
புலரும் பொழுதுகளோ புரியவில்லை
நாய்படாப் பாடுகளே நிலைப்பாடாக...!
***
பாவம்...
மேய்ப்பர்களும்
பெரும் பாடாக...!
எல்லாவற்றுக்குமே
எமக்குத் தட்டுப்பாடாக...!
***
ஆடுகளாய் மாடுகளாய்
காட்டு மிருகங்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த இரண்டுகால் மிருகங்கள்" எங்களை
எண்ணியிருக்க வேண்டும்...!
***
நாங்களோ எண்ணிக் கொண்டிருக்கிறோம்...
"பசுமை" வருமென்றும்
"பசுமைப் புரட்சி" வெல்லுமென்றும்
காலம் பதில் சொல்லுமென்றும்...!!
***

-நதி மதி-

▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲

# புள்ளி

ஒற்றைப் புள்ளிதான்
இட்டு வைத்தேன்
ஓவியம் ஆவதற்குள் கலக்கம்
மழை பொழிந்ததோ

மனத்திரையில் இட்டுவைத்த
மலர்க்கொத்து
பூத்துக்குலுங்கலையே
மொட்டிலே கருகியதும் ஏனோ

அள்ளி முடித்த கூந்தல் ஈரம்
ஆங்கிங்கெனாதபடி திமிர
தாங்கிய துணியும் தரையில்

சிற்றெறும்பாய் நானும்
சிலகால காத்திருப்பு
மழைக்காலம் என் முன்னே

இட்டது என்னமோ புள்ளி
இறைவன் கலைத்து சேர்த்ததில்
இன்று ஒளியாய் மிளிர்கிறது.

கவிச்சுடர் சிவரமணி
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்வு பிழைத்தல் பற்றிய பாடல்

ஈரைந்து திங்கள் எனைத் தாங்கிய
தாயின் கருவறையையும்
நினைவு தெரிந்த தினம்முதல் பாராட்டி
சீராட்டி
அவையத்து முந்தியிருப்பச் செய்த
தந்தையையும்
உயிரென அமைந்த தங்கையையும்
உறவாலும் நட்பாலும் உயர்ந்து நிற்கும்
எனதருமை தம்பியையும்.

வாழ்வுக்கு வளமூட்டிய பிறப்பால்
உரிமையான உறவுகளையும்
உயிரெழுத்தை எழுத வைத்த
ஆசான்களையும்
நான் தேர்ந்தெடுக்கவில்லை.

கல்வியுடன் நண்பர்களையும்
கடமையையும்
காதலுடன் உன்னையும்
விருப்புடன் தேர்ந்தெடுத்தேன்.
இவை எல்லாம் விருப்புடன்
என்னுடன் உறவாட

நீ மட்டும் ...
எனை விட்டுச் சென்றதேனோ?
என் தெரிவு.....?

-வி.குணபாலா-

---

நூல் அறிமுகக் குறிப்பில் உங்களது கவிதை நூல் இடம்பெற வேண்டுமாயின் ஒரு பிரதியை அனுப்புங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கப்பெற்றோம்.

## இலங்கை முஸ்லீம்களை புரிந்து கொள்ளல்.



தவறான புரிதலானது இரு பக்ககங்களைக் கொண்டுள்ளது. ஒன்று முஸ்லிம்களைப் பற்றி, ஏனைய சமூகங்கள் மத்தியில் நிலவுகின்ற தவறான அபிப்பிராயங்கள், இரண்டு முஸ்லிம்கள் தம்மைப் பற்றிக் கொண்டிருக்கின்ற தவறான அப்பிப்பிராயங்கள். இந்நூல் இந்த இரண்டையும் பற்றிப் பேசுகின்றது. இலங்கைச் சூழலில், முஸ்லிம்கள் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளின் பின்னணியில் எழுதப்பட்டுள்ள இந்நூல், இலங்கையைத் தாண்டி, உலக அளவில் முஸ்லிம் சமூகங்கள் அக்கறை கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றியும் பேசுகின்றது.

ஆசிரியர் : அ.வா.முஹ்சீன்<br>
பதிப்பகம் : கஸல் பதிப்பகம், ஏறாவூர்<br>
விலை : 900.00<br>
தொடர்பு : 836, பாலையூற்று,<br>
திருகோணமலை<br>
0778089827

அனைவரும் அவசியம் படிக்கவேண்டிய நூல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவனும் எஜமானும்

தலைவர்களுக்குத்
தொண்டர்கள் தேவை
எஜமானர்களுக்கு
அடிமைகள் தேவை

தலைவனுக்கும் தொண்டனுக்கும்
இலக்கு ஒன்றே
மக்களுக்கானது

ஏவல் செய்யவும்
ஏவி விடவும்
காவல் காக்கவும்
காலை நக்கி விடவும்
விசுவாசம் கொண்ட
சேவகம் செய்வதையே
இலக்காய் கொண்ட
அடிமைகளே
எஜமானர்களின் தேவை

விரும்பியோ விரும்பாமலோ
சமூகத்தில் சிலர்
தலைவர்களாகி விடுகின்றனர்
அவர்களைச் சுற்றி தொண்டர்களும்
திரண்டு விடுகின்றனர்
பிறகென்ன...

தலைவர்கள் எஜமானர்களாகிவிட
தொண்டர்களும் மக்களும்.....?

- எஸ்.ஆர்.தனபாலசிங்கம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமும் பெயர்ப்பும்

# What Makes a Hero

## Jose Maria Sison (8.2.1929 – 16.12.2022)

It is not the manner of death
That makes someone a hero.
It is the meaning drawn
From the struggles against the foe.

There is the hero who dies in the battlefield.
There is the hero who dies of hunger and disease.
There is the hero who dies of some accident.
There is the hero who dies of old age.

Whatever the manner of death,
There is a common denominator.
A hero serves the people
To his very last breath.

---

வங்கி மூலம் வருட சந்தா செலுத்த விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு 450/= செலுத்திப் பற்றுச் சீட்டினை அனுப்பி வைக்கவும்.

**R.Thanabalasingam**
**A/C No.106653402077**
**Sampath Bank**
**Trincomalee.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரனாக்குவது எது

ஜோஸெ மரியா ஸிஸொன் (8.2.1929 – 16.12.2022)

ஒருவனை வீரனாக்குவது
பகைவனுக்கெதிரான போராட்டத்தினின்று
பெறும் அர்த்தமன்றிச்
சாவின் விதமல்ல.

போர்க்களத்திற் சாகும் வீரனுள்ளான்
பசியாலும் நோயாலுஞ் சாகும்
வீரனுள்ளான்.
ஏதோ விபத்திற் சாகும் வீரனுள்ளான்.
வயது முதிர்ந்து சாகும்
வீரனுள்ளான்.

சாவின் விதம் எதுவாயினும்
பொதுக் கூறாக ஒன்றுண்டு.
ஒரு வீரன் தன் இறுதி மூச்சு வரை
மக்களுக்குச் சேவையாற்றுகின்றான்.

சி.சிவசேகரம்

(அண்மையிற் காலஞ்சென்ற பிலிப்பினிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஹோஸெ மரியா ஸிஸொன் ஒரு சிறந்த கவிஞருமாவார்.)

ISSN 1800-3311



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org